நாள்: 13.02.2026
AS. 5/2015
பெயர் சுப்புராஜ்
பி.வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

பி.சா.ஆ.48 விடுதலை ஆவணத்தை எழுதிக்கொடுத்ததாக சொல்லும் நபர் என் உடன் பிறந்த சகோதரர் ஆகும். சுப்ரமணியன் மேற்படி பி.வா.சா.ஆ.48 விடுதலை ஆவணத்தை மட்டும் தான் எழுதிக்கொடுத்துள்ளார். விசாரணை நீதிமன்றத்தில் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளேன். 02.03.2003 ம் தேதி தான் சுப்பிரமணியன் விடுதலை பதியாத ஆவணம் எழுதிக்கொடுத்ததாக உத்தமபாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் 02.01.2003 என்று தான் சொன்னேன். தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. 02.03.2003 ம் தேதி விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்தாக வவிசாரணை நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துவிட்டு தற்போது பி.வா.சா.ஆ.48 ஆவணத்தை மோசடியாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 02.03.2003 ம் தேதி விடுதலை ஆவணம் தட்டச்சு பிழை என்று நான் சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. என் தந்தைக்கு நான்கு நபர்கள் வாரிசு. தேவராஜ், கனகராஜ், சுப்புராஜ், சுப்பிரமணி ஆகியோர்கள் வாரிசுகள். பி.வா.சா.ஆ.48 ஆவணத்தில் என் தந்தையின் வாரிசுகள் அனைவரும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் முதல் மனைவி மக்கள் இரண்டு பேர் போட்டுள்ளார்கள். சுப்பிரமணியன் குழந்தை 2005 ல் தான் பிறந்தது. அவர் 2003 ல் எழுதிக்கொடுத்துவிட்டார்.

பி.வா.சா.ஆ.48 ஆவணத்திற்கு முரண்பாடாக நான் தற்சமயம் புதிதாக விசாரணை நீதிமன்றத்தில் சொல்லாத சாட்சியத்தை சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.48 ஆவணங்கள் சம்பந்தமாக சாட்சிகளை விசாரிக்க தயாராக உள்ளேன். விசாரணை நீதிமன்றத்தில் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளார். பி.வா.சா.ஆ.49 முதல் பி.வா.சா.ஆ.51 வரை உள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.48 சம்பந்தமாக யாரும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. விசாரணை நீதிமன்றத்தில் அவர்கள் சாட்சியம் அளித்துள்ளார்கள். பி.வா.சா.ஆ.48 ஆவணம் முந்தைய வழக்குகளில் நிராகரிக்கப்பட்ட ஆவணம் என்றால்

சரியல்ல. பி.வா.சா.ஆ.48 ஆவணம் மூலம் மட்டும் எனக்கு வருவாய் துறை ஆவணங்கள் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

என் தந்தைக்கு 4 வாரிசுகள் என்று சொல்லியுள்ளேன். அவர்களின் தேவராஜ், கனகராஜ் என் தந்தையின் முதல் மனைவியின் வாரிசுகள் ஆகும். முதல் மனைவி ராஜம்மாள் இறந்தபிறகு என் தாயார் சீனித்தாய் என்ற செல்லத்தாய் 2 வதாக திருமணம் செய்தார். அவருக்கு நானும், சுப்பிரமணியனும் வாரிசுகள். விசாரணை நீதிமன்றத்தில் முதல் மனைவியின் மகன்கள் இறந்துவிட்டதால் தேவராஜ் மகனும், கனகராஜ் மனைவியும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

மறுவிசாரணையில் சொல்லியுள்ள என் தந்தைக்கு மேற்படி 4 நபர்கள் தான் வாரிசுகள் என வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. ஆனால் நாங்கள் பாக பிரிவினை செய்துள்ளோம்.

(ஒம்).M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி
உத்தமபாளையம்